தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச கூலிச் சட்டம்.

180—(*வினா எண் 9036) திரு. கோ. வீரய்யன் மற்றும் திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கிழக் தஞ்சை மாவட்டத்தைத் தவிர, மற்றப் பகுதிகளில் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ள காலமான மூன்று ஆண்டுகள் கடந்துவிட்டதென்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அச்சட்டத்தைத் திருத்தி அமைக்க ஒரு குழுவை அரசு நியமிக்குமா?

(இ) ஆம் எனில், அது எப்போது நியமிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ), (ஆ) மற்றும் (இ): 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் பிரிவு 3(b)-இன்படி, குறைந்த அளவு ஊதிய விதங்களை மாற்றியமைக்க வேண்டிய இடைவெளி ஐந்து ஆண்டிற்கு மிகாமல் இருக்க வேண்டும். 5—4—1983 முதல் திருத்தி அமைக்கப்பட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கான குறைந்த அளவு ஊதிய வீதங்களை மேலும் மாற்றியமைப்பதில் அரசுக்கு ஆலோசனை வழங்க குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் 5 (1) (a) பிரிவின் கீழ் ஒரு ஆலோசனைக் குழு அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1948 ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ், அதனுடைய பரிசீலனைக் காலம் 5 ஆண்டுகளுக்கு என்று குறிப்பிட்டார்கள். ஆனால் இது வரையில் 3 ஆண்டுகள் என்றுதான் நடைமுறையில் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கிறது. எனவே 5 ஆண்டுகள் என்பதை 3 ஆண்டுகளாக மாற்றி, இந்த ஆண்டிலேயே அதைப் பரிசீலிப்பதற்கு உரிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புவதோடு, இப்போது குறைந்த

1987 மார்ச் 26]

பட்ச ஊதியச் சட்டத்தின்படி கூலி கொடுப்பதில்லை. குறிப்பாக பெண்களுக்கு, சட்டப்படி இருக்கக்கூடிய ஊதியம் கொடுக்காமல், நான்கு ரூபாய், ஐந்து ரூபாய் என்று கொடுக்கக்கூடிய அளவில் தான் நிலைமை இருக்கிறது. ஆகவே குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள ஊதியத்தைப் பெண்களுக்குக் கொடுப்பதற்கு உறுதியான ஒரு நிர்வாக ஏற்பாட்டினைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு சு. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, குறைந்த அளவு ஊதிய விகிதத்தை மாற்றி அமைக்கின்ற வகையில் ஒரு குழு அமைப்பதற்கான ஆலோசனை ஏற்கெனவே இருந்து வருகிறது. அதை விரைவுபடுத்தி அந்தக் குழுவை அமைத்து குறைந்த அளவு ஊதியத்தை மாற்றி அமைப்பதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கும். பெண்களுக்குக் கூலி குறைவாகத் தரப்படுகிறது என்று எடுத்துச் சொன்னார்கள். அது பற்றி எங்காவது குறிப்பிட்ட இடத்தில் குறைபாடு இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால் நிவர்த்தி செய்ய முடியும். நாடு முழுவதும் நிர்வாக ஏற்பாடு இதற்காகச் செய்வது என்பது வீண் செலவை உண்டாக்கும்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் விவசாயக் கூலிகளுக்கு என்ன கூலி நிர்ணயம் செய்தாலும் நிலச் சுவான்தார்கள் கொடுப்பதில்லை. 1980-வது வருடம் வட ஆர்க்காடு மாவட்டத்தில் நிலச்சுவான்தார்கள் அரசாங்கம் நிர்ணயித்த கூலியை கொடுக்காத காரணத்தால் அங்கே நக்சலைட்டுகள் பெரும் போராட்டங்களையும் கலவரங்களையும் செய்தார்கள். ஆகவே அரசாங்கம் நிர்ணயிக்கின்ற கூலியை நிலச்சுவான்தார்கள் கொடுக்கிறார்களா இல்லையா என்பதைக் கண்காணிக்க 'பறக்கும் படை' ஒன்றை நிறுவி நிர்வாகச் சீர்திருத்தத்தை ஒழுங்காகச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, பறக்கும் படையை அமைப்பதை விட, ஆங்காங்கே அமைப்பு ரீதியாக தொழிலாளர்கள் ஒற்றுமையோடு இருந்தால் அத்தகைய சலுகைகளைப் பெற முடியும். எங்காவது அப்படிக் குறைபாடுகள் நடக்கின்றது என்று சொன்னால் அங்கே அரசு நிச்சயமாகத் தொழிலாளர்கள் பக்கம் இருக்கும்.

இலங்கை அகதிகளுக்கு முகாம்கள் அமைத்தல்.

181—(*வினா எண் 12457) திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலங்கையிலிருந்து வரும் அகதிகளுக்காகத் தமிழகத்தில் எத்தனை இடங்களில் நிரந்தர, தற்காலிக முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளது?

(ஆ) இந்த அகதிகளுக்காக தமிழக அரசு செலவழித்துள்ள தொகை எவ்வளவு?

(இ) மத்திய அரசு உதவித் தொகை ஏதேனும் வழங்கியுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, (அ) இலங்கை அகதிகள் 1983 ஜூலை முதல் வந்து கொண்டிருக்கிறார்கள். 1983-ல் அவர்களது வருகை அதிகரித்தபோது இரு நிரந்தர முகாம்களைத் தவிர 172 தற்காலிக முகாம்கள் ஏற்படுத்தப்பட்டன; மண்டபத்தில் 1,200 புதிய வீடுகள் கட்டப்பட்டதன் விளைவாகவும், விளாங்குடியில் 792 புது வீடுகள் அகதிகளுக்காக வழங்கப்பட்டதன் விளைவாகவும் இவை தற்போது 4 நிரந்தர முகாம்களும் 65 தற்காலித முகாம்களுமாக இயங்குகின்றன.

(ஆ) மற்றும் (இ): அகதிகளுக்காகச் செலவழிக்கப்பெறும் அனைத்துச் செலவுகளும் மைய அரசினால் ஏற்கப்படுகின்றன. 1983-84 ஆம் ஆண்டு முதல் 1986-87 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முடிய இலங்கை அகதிகளின் நிவாரண உதவிகளாக ரூ. 631.91